
ஸ்ரீ :

# அநுமன் சாலிஸா.

(கோஸ்வாமி துளஸி தாஸரின் ஹநுமன் சாலிஸா)

## தமிழாக்கம் : பொய்கையடியான்.



அன்புள்ள பக்தர்களுக்கு,


பொய்கையடியானின் தாழ்மையான நமஸ்காரங்கள். அடியேன் பரிமுகன் துதியைத் தொடர்ந்து கோஸ்வாமி துளஸிதாஸர் அருளிச்செய்த ஹநுமன் சாலிஸா (சாலிஸா என்றால் நாற்பது) என்ற இரண்டு வரி ஸ்லோகத்தை

"அநுமன் நாற்பது " என்று தமிழில் வழங்கும் பாக்யம் அந்த ஸ்ரீராமனின் அருளாலும், ஹநுமனின் கருணையாலும் கிடைக்கப்பெற்றேன் ஸ்வாமி துளஸிதாஸர் தாம் நோய்வாய் பட்டிருந்தபோது இந்த ஸ்லோகத்தை உச்சரித்து பூரண குணமடைந்ததாக சொல்கிறார்கள். அயோத்தியில் பேசப்படும் "அவாதி" என்ற இந்தி மொழியில் எழுதப்பட்டு வடநாட்டவர்களால் பக்தியுடன், சிரத்தையாக சொல்லப்படும் இந்த ஸ்லோகத்தை தமிழில் நாம் சொல்லி அந்த அநுமனின் அருளைப்பெற

வேண்டிக்கொள்கிறேன்

தாஸன்,

பொய்கையடியான்.



# த்யானஸ்லோகம்.

*************************************************

கோரிய பலன்களை நமக்கு என்றும் அளித்திடும்,

ரகுகுல திலகமாம் ஸ்ரீராமனைப் நான் பாடிடுமுன் ;

சீரிய எம் குருவின் மலர் பாதங்களை வணங்கி,

வெகுவாக மனதை தூய்மை யாக்கிக்கொள்கிறேன்.

அஞ்சனையின் மைந்தா! வாயுகுமாரா! அறிவற்ற இம்மூடனின் பணிவான
அஞ்சலியை நீ கருணையுடன் ஏற்று அறிவையும் பலத்தையும்அருள்வாயே ॥

வானரர்கள் தலைவனே, விரிந்த கடல் போன்ற அறிவுதனை பெற்றவனே,
வானவர்களும் மற்ற மூன்று உலகத்தவராலும் போற்ற படுபவனே வாழ்க ॥

ராமதூதனாகச் இலங்கை சென்று உன் சிறந்த பலத்தைக் காட்டியவனே,
நேமத்துடன் கூடிய உந்தனுக்கு, சிகரம் தொடும் புகழ் உண்டாகட்டும் ॥

இடிபோன்று முழக்கம் செய்பவனே, மின்னல் போன்று தாவிச்செல்பவனே,
கடிதில் அடியேனை வாட்டிடும் இன்னல்களை நீயும் தொலைத்திடுவாயே ॥

திரண்ட திருமேனியும், தங்கநிறத்தில் கண்டவரை கவருகின்ற முகமும்,
சுருண்ட கேசத்தையுடையவனாய், குண்டலங்கள் காதில் அணிந்தவனே. ॥

கொடியொன்றை கரந்தனில் ஏந்தி இடிபோல் முழங்கும் கதையைத்தாங்கி
தடித்து திரண்ட புஜங்களில் மடித்துக்கட்டிய முஞ்சா கயுறுயுடையவனே! ॥

முக்கண்ணனின் அருளுடன் கேஸரியின் குமாரனாய் அவதரித்தவனே,
முக்குணங்களையும் வென்று உலகமுழுவதும் தொழிதிட இருப்பவனே ॥

அண்ணல் பாதங்களில் எல்லாக்காலமும் சேவைசெய்ய விழைபவனே
எண்ணற்ற ஆற்றல் அறிவுடன் எல்லா ஞானமும் கைவரப் பெற்றவனே ॥

இதயமென்ற தாமரையில் ராமன், ஸீதை, இலக்குவன் மூவரும் இருக்க,
உதயமாகிற சிறந்தபக்தியுடன் அவன் கதைகளைக் கேட்டு மகிழ்பவனே. ॥

மயக்கும் சிறுவுருவத்துடன் சென்று இலங்கை நகரைத் தீக்கிரையாக்கி,
வியக்கும் வண்ணம் சீதைமுன் தோன்றி விவரங்களை தெரிவித்தவனே ॥ 10.